செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.3.2019) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வனத்துறையில் 726 வனக்காப்பாளர்கள் மற்றும் 59 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்கு பணிஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு வனத்துறையில் சீருடைப்பணியாளர்களாக உள்ள வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப்பணியிடங்களை நிரப்ப மாநில அளவில் 'தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம்' ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15.5.2012 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு வனத்துறை, அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் காலியாக உள்ள வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் வாயிலாக நிரப்ப தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமம் ஏற்படுத்த 29.6.2012 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, முதன்முறையாக 2017ஆம் ஆண்டு, தமிழ்நாடு வனத்துறை, அரசு ரப்பர் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் உள்ள வனவர், கள உதவியாளர் பணியிடங்களுக்கு 181 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு வனத்துறையில் காலியாகவுள்ள வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களுக்கு வனத்துறையில் முதல்முறையாக இணைய வழித்தேர்வு 10.12.2018 மற்றும் 11.12.2018 ஆகிய நாட்களில் 30 மாவட்டங்களில் 140 தேர்வு மையங்களில் நடத்தப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முறையாக இப்பணியிடங்களுக்கான நடைத்தேர்வு / உடற்திறன் தேர்வு Radio Frequency Identification மற்றும் GPS தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு நடத்தப்பட்டது. மேலும், தேர்வு நடைபெற்ற இரண்டரை மாதங்களுக்குள் முடிவுகள் வெளியிடப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு வனத்துறையில் 726 வனக்காப்பாளர்கள் மற்றும் 59 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 10 நபர்களுக்கு பணிஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்) டாக்டர் எச். மல்லேசப்பா, இ.வ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை சிறப்புச் செயலாளர் திரு.அப்பாஸ், இ.வ.ப., வனச்சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் தலைவர் திரு.விஜயந்திரசிங் மாலிக், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**